மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: கனம் உறுப்பினர் எடுத்துச் சொன்ன யோசனையின் முறையிலேதான் அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது.

திரு. டி. மார்டின்: நீதிபரிபாலனத் துறையிலே எக்ஸ்பீரியன்ஸ் மிகவும் அவசியப்படுகின்ற காரணத்தால் தமிழகத்தில் இப்பொழுது பணியாற்றுகின்ற சப் ஜட்ஜ்களின் ரிடையர்மெண்ட் ஏஜை 55-லிருந்து 58-ஆக உயர்த்துவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா? இல்லையென்றால், அதைப்பற்றி பரிசீலனை செய்து சீக்கிரம் ஒரு முடிவு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: 55 வயதிலிருந்து 58 வயதாக உயர்த்துவது என்ற திட்டமே நீதித்துறையிலே இருந்துதான் ஆரம்பமாயிற்று. கனம் உறுப்பினர் அவர்களுடைய யோசனை கவனிக்கப்படும்.

திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ: தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளிலே வேலை செய்கின்ற ஆசிரியர்களின் ஓய்வுபெறும் வயது 60-ஆக இருக்கிறது. ஆனால் அரசாங்கப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள், அதிகாரிகள் இவர்களின் ஓய்வுபெறும் வயது 58-ஆக இருக்கிறது. இந்த பாரபட்சம் நீக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: கனம் உறுப்பினர் சொன்ன யோசனை உரிய நேரத்தில் உரிய முறையில் கவனிக்கப்படும்.

Complaints of corruption charges

* 23 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Chief Minister be pleased to State the number of complaints of corruption charges received against I.A.S. Officers in the State from the years 1965 to 1967?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: ஒன்று மட்டும்.

திரு. ஏ. எம். ராஜா: தலைவர் அவர்களே, ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மீது விசாரணை நடக்கவேண்டுமென்றால், தலைமைச் செயலாளரின் அனுமதி பெறவேண்டுமென்று விதி இருக்கிறது. தலைமைச் செயலாளரும் ஐ.ஏ.எஸ். ஆக இருப்பதால் சந்தேகத்திற்கு இடம் இருக்கிறது. ஆகவே இந்த விதியை மாற்றி தலைமைச் செயலாளரின் அனுமதி பெறுவதற்குப் பதிலாக முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற வேண்டுமென்று விதியை மாற்ற அரசாங்கம் முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: கனம் அங்கத்தினருடைய மறைமுகமான குற்றச்சாட்டு ஆதாரமற்றது. தலைமைச் செயலாளர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருப்பதாலே மற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மீது குற்றங்கள் வந்தால், அவற்றைக் கவனிக்கமாட்டார்கள் என்று கூறுவது தவறு. ஏனென்றால், இப்பொழுது தலைமைச் செயலாளர் அவர்களால்தான் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருந்தாலும் கவனிக்கப்பட்டு இருக்கிறது.

DR. H. V. HANDE : Sir, for the past several years we have been stressing that the root of corruption is political corruption, not even the corruption of officers. When the present ruling party was in the Opposition, the present Hon. Minister for Law was good enough to bring forward a Bill enjoining the declaration of

assets of all members including ministers. Unless the members of the Legislature including the ministers take a decision that they will lay their cards on the table, there will not be much improvement. Will the Chief Minister, in whom the entire Tamilnad has great confidence, show us the way?

THE HON. THIRU C. N. ANNADURAI : While accepting the suggestion of the hon. Member I will add that that will not be the end of corruption. Corruption takes place by various other methods. Whenever there is greater economic activity and whenever there is the desire to get quick returns and greater profits by underhand methods, corruption is bound to take place. But more depends upon the depravity of human nature than the political aspect of it. Anyhow in order to exonerate ourselves, we politicians are prepared, just as our hon. Friend is prepared, to disclose all our assets. But my only apprehension is that even in that disclosure, there should not be corruption.

திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, அகில இந்திய சர்வீஸை மத்திய சர்க்கார் அதிகரித்துக்கொண்டே போகிறதே, இதைத் தடுத்து நிறுத்துவதற்கு நம்முடைய மாநில அரசு முயற்சியெடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இது இந்தக் கேள்வியோடு தொடர்பு கொண்டதல்ல என்றாலும், அகில இந்திய சர்வீஸ்களை அதிக அளவுக்கு விரிவாக்கிக் கொண்டு வருவதை இந்த அரசு விரும்பவில்லை என்று மத்திய அரசுக்கு இந்த அரசு பல்முறை வலியுறுத்திக் கொண்டு வந்திருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Sir, whereas I am not interested in the name of the person who committed the offence, what was the offence committed, the amount involved, the *modus operandi* which the Government followed to find out the corruption and how was it disposed of? Will the Chief Minister agree with me when I say that, unless the average national character of every human being, let him be an officer or politician or anybody else, improves, there will not be an end to corruption in our country?

THE HON. THIRU C. N. ANNADURAI : While accepting the general thesis of my hon. Friend that a particular section of society will be only in the nature of the society as a whole, as far as this particular case is concerned, the hon. Member wants to know what has been done. The enquiry has been completed, the report has been submitted to the Government and it is under study and my Friend will accept that it will not be prudent at the present stage to divulge all the facts concerned with that.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு.**—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் உறுப்பினர்களால் அவ்வுரை சரிப்பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]